## வெளியேற்றத்தில் என்ன நடக்கிறது?

வீட்டிற்குச் செல்வதற்கு முன்னர் குடும்பங்களுடன் விவாதிக்கப்படுகின்ற சில பொதுவான விஷயங்கள் இங்கே:

- **எவ்வாறு மற்றும் எப்பொழுது மருந்துகள் கொடுக்க வேண்டும்:** உங்கள் குழந்தைக்கு மருந்துகளை எவ்வாறு கொடுக்க வேண்டும் என்பதை உங்கள் குழந்தையின் பராமரிப்பு குழு உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் விளக்கும்.
- **கல்வி:** மருந்துகள் குறித்து உங்கள் கேள்விகளுக்கு உங்கள் குழந்தையின் பராமரிப்பு குழு பதிலளித்து உதவ முடியும்.
- **மருந்து பாதுகாப்பு:** வீட்டுக்குச் செல்வதற்கு முன் நிதி மூலங்கள் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.
- **தகவல் ஒப்படைப்பு:** ஒப்படைக்கப்பட்ட ஆவணங்கள் உங்கள் குழந்தை மருத்துவமனையை விட்டு வெளியேறும்போது உங்கள் குழந்தையின் சமூக குழுவுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. இதன் தொடர்ச்சியான சந்திப்பிற்கான தேதிகள் மற்றும் நேரங்களை நீங்கள் அறிந்துள்ளீர்கள் என்பதை உறுதிசெய்து கொள்ளவும்.

**ஹாலந்து ப்ளூர்வியூவில் இருந்து உங்கள் குழந்தை வெளியேற்றப்பட்ட பிறகு, உங்கள் குழந்தையின் குடும்ப மருத்துவரால் அல்லது சிறப்பு மருத்துவரால் உங்கள் குழந்தையின் முன்னேற்றம் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்ட பிறகு மருந்துகள் பரிந்துரைக்கப்படும்.**

**மருத்துவமனையிலிருந்து சென்ற ஒரு மாதத்திற்குள் உங்கள் குடும்ப மருத்துவர் அல்லது குழந்தை மருத்துவரை தொடர்பு கொள்ளமாறு நாங்கள் உங்களை வலியுறுத்துகின்றோம்.**

**உங்கள் குழு உங்களுக்காக இங்கு உள்ளது மற்றும் உங்கள் குடும்பத்துடன இணைந்து சமூகத்தின் மாற்றத்திற்காக பணிபுரியும்.**


## ஹாலந்து ப்ளூர்வியூ குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனை பற்றி

ஹாலந்து ப்ளூர்வியூ குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனையானது குறைபாடுகள் உள்ள குழந்தைகளின் வாழ்க்கையினை மேம்படுத்துவதில் கவனம் செலுத்திவரும் கனடாவின் மாபெரும் குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனையாகும்.

பயன்பாட்டு ஆராய்ச்சி, கற்பித்தல் மற்றும் கற்றல், மற்றும் வாடிக்கையாளர் மற்றும் குடும்பம் மையப்படுத்தப்பட்ட பாதுகாப்பு ஆகியவற்றில் ஹோலண்ட் ப்ளூர்வியூ ஒரு உலகளாவிய தலைவர்.

நாங்கள பெருமூளை வாதம், மூளையதிர்ச்சி உட்பட்ட மரபணுசாராத மூளைக்காயம், தசைநார் தேய்வு, உடல் உறுப்பு துண்டிக்கப்பட்ட, கால்-கை வலிப்பு, ஸ்பைனா பிஃபிடா (மூடப்படாத முதுகுத்தண்டு குறைபாடு), கீல்வாதம், பிளவுபட்ட உதடு மாற்றும் தாடை பிரச்சனை, ஆட்டிசம் மற்றும் பிற உடல் மற்றும் வளர்ச்சி குறைபாடுகள் போன்ற குறைபாடுள்ள குழந்தைகளுக்கான ஒரு மாகாண ஆதார மாற்ற பாதுகாப்பு சேவை மையம் ஆகும்.

ஊனமுற்ற குழந்தைகளுக்கான சாத்தியமான உலகத்தை உருவாக்குவதே எமது நோக்கம் ஆகும்.





ஹாலந்து ப்ளூர்வியூ குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனை
150 கேஇல்கோர் சாலை, டொராண்டோ, ஒண்டாரியோ M4G 1R8 [R31.17]
தொலைபேசி: 416-425-6220 கட்டணமில்லா இலவச அழைப்பு: 800-363-2440
தொலைநகல்: 416-425-6591 | மின்னஞ்சல்: info@hollandbloorview.ca

**www.hollandbloorview.ca**


# வீட்டில் மருந்துகளை நிர்வகித்தல்

## குடும்பங்களுக்கான மருந்து வளங்கள்



Holland Bloorview
Kids Rehabilitation Hospital


# ஹாலந்து ப்ளூர்வியூ-வில் நீங்கள் தங்கியிருக்கும்போது

- உங்கள் குழந்தையின் மருந்தாளருடன் பேசுங்கள் - அவர்கள் உங்களுக்கு கீழுள்ளவைகள் போன்ற ஆதாரங்களை வழங்கலாம்:
  - மருந்து மற்றும் பக்க விளைவு தகவல்
  - மருந்து நாள்காட்டிகள்
  - மருந்து பாதுகாப்பு விருப்பங்கள்
- உங்கள் குழந்தைக்கு ஒரு மருந்தின் மூலம் பக்க விளைவு ஏற்பட்டுள்ளதாக நீங்கள் சந்தேகித்தால், உங்கள் மருத்துவர், செவிலியர் அல்லது மருந்தாளரிடம் பக்கவிளைவின் தன்மையை பற்றியும் மற்றும் எப்போது அது துவங்கியது என்பதையும் தெரிவுபடுத்தவும்.
- மருந்துகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன, அதாவது, உணவளித்தல் குழாய் மூலமாகவா அல்லது ஊசி மூலம், நிர்வகிக்கப்படுகின்றனவா போன்றவற்றை உங்கள் குழந்தையின் குழு விவாதிக்கும்.
- அன்றாட வாழ்வில் மருத்துவ மேலாண்மைக்கு உங்கள் தினசரி வழிகளில் மருந்துகளை எவ்வாறு திட்டமிடுவது என்பதையும் மற்றும் எவ்வாறு குடும்ப உறுப்பினர்களையும் மற்றும் பராமரிப்பாளர்களிடம் ஈடுபடுத்துவது போன்றவற்றை பற்றி விவாதிப்பதன் மூலம் தயார் செய்யுங்கள்.

**குறிப்புகள்**

# மருந்துகளை நிர்வகிப்பதற்கான உதவிக்குறிப்புகள்

## மருந்துகளை கண்காணித்தல்



உங்கள் மருந்தாளரிடம் மருந்துகளை கண்காணிப்பதற்கான உதவிக்குறிப்புகளை கேளுங்கள். நீங்கள் மருந்து முறைகளைக் கண்காணிக்க உதவும் ஒரு மருந்து நாள்காட்டியினை அவர்களால் வழங்க இயலும். மாத்திரை பொதிகள் மற்றும் பொதிமருந்துகள் *(வலப்புறம் உள்ள படத்தைக் காணவும்)* மருந்துகளை நிர்வகிக்க உதவும். சிலர் மருந்துகளை எந்த நேரத்திற்கு கொடுக்க வேண்டும் என்பதை நினைவுபடுத்த டைமர்களை (நேர நினைவூட்டி) பயன்படுத்துகின்றனர்.

## திரவ மருந்துகளை நிர்வகித்தல்



திரவ மருந்துகளை வழங்க ஒரு வாய்வழி ஊசியினை (சிரிஞ்ச்) பயன்படுத்தவும் - அவைகள் மருந்து குப்பி அல்லது கரண்டிகளை விட மிகவும் துல்லியமானவையாகவும் பயன்படுத்த எளிமையாகவும் இருக்கும். வெவ்வேறு செறிவுகளை கொண்ட மருந்துகள் இருக்கலாம் என்பதால், மருந்துகளின் வீரியம் மற்றும் அதன் அளவு ஆகியவற்றை சரிபார்ப்பது மிகவும் முக்கியமாகும். மருந்துகள் எவ்வளவு மற்றும் எப்போது கொடுக்கப்பட வேண்டும் என்பதும் முக்கியமானது.

உங்கள் திரவ மருந்துகளின் காலாவதி தேதியையும் சேமிப்பதற்கான நிபந்தனை வழிமுறைகளையும் உங்கள் மருந்தாளரிடம் கேளுங்கள்.

## மருந்துகளின் சுவையினை மறைத்தல்



பழச்சாறு அல்லது ஐஸ் கிரீம் போன்றவற்றில் கலந்து அளித்தல் போன்று மருந்துகளின் சுவையினை மேம்படுத்த பல வழிகள் உள்ளன, சில மருந்துகளை திரவமாக அல்லது ஒரு மாத்திரை நொறுக்கியினை பயன்படுத்தி நொறுக்கி அதனை உணவுக்குள் தூவி விடலாம். எனினும், அனைத்து மருந்துகளையும் மாற்ற முடியாது - முதலில் உங்கள் மருந்தாளரிடம் இதைப்பற்றி கேட்டு அறிந்துகொள்ளவும்.

# மருந்துகளுக்கான பயனுள்ள ஆதாரங்கள்

**மருந்துகள் பற்றிய உங்கள் புரிதலை வலுப்படுத்துவதற்கு இந்த ஆதாரங்கள் உங்களுக்கு உதவியாக இருக்கலாம் அனால் இவைகள் உங்கள் குழந்தையின் பராமரிப்பு குழுவின் நிபுணத்துவத்தை பதிலீடு செய்ய முடியாது. உங்களுக்கு குறிப்பிட்ட சந்தேகங்கள் இருந்தால் தயவுசெய்து அவர்களை தொடர்புகொள்ளவும்.**

## நீங்கள் எங்களுடன் தங்கியபிறகு

**எபௌட் கிட்ஸ் ஹெல்த்** என்பது நோயுற்ற குழந்தைகளுக்காக உடல்நிலை மற்றும் மருந்துகள் பற்றிய தகவலுடன் மருத்துவமனையால் வழங்கப்பட்ட ஒரு ஆன்லைன் சாதனமாகும். ***www.aboutkidshealth.ca***

**சேப்:. மேடிக்கேஷன் யூஸ்** என்பது மருந்துகள் பயன்படுத்தும் முறை மற்றும் உடனடி தெரிவிக்கும் வசதி போன்ற கருவிகளை அளிக்கும் கனடாவின் பாதுகாப்பான மருந்துகள் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஒரு ஆன்லைன் சாதனமாகும். ***https://safemedicationuse.ca/***

**ஒண்டாரியோ மருந்துகளின் மகத்துவத் திட்டங்கள்** என்பது ஒண்டாரியோ சுகாதாரத்துறை அமைச்சகத்தால் வழங்கப்பட்ட மருந்து நிதி ஆதாரங்கள் ஆகும். ***www.health.gov.on.ca/en/public/programs/drugs***

**டெலிஹெல்த் ஒண்டாரியோ** - பதிவுசெய்யப்பட்ட செவிலியர்களிடமிருந்து மருத்துவப் பரிந்துரைகள், ஒரு நாளின் 24 மணி நேரமும், வாரத்தின் 7 நாட்களும். ***(1-866-767-0000)***

**அறிவே சிறப்பான மருந்து (க்நாலேட்ஜ் இஸ் தி பெஸ்ட் மெடிசன்)** உங்கள் மருந்து பதிவுகளைப் பற்றி தகவல்களுக்கு பொறுப்பேற்று உங்களுக்கு உதவும் ஒரு இலவச மற்றும் ரகசிய MyMedRec மொபைல் பயன்பாடு அல்லது தனிப்பட்ட மருந்து புத்தகத்தினை வழங்குகிறது. ***www.knowledgeisthebestmedicine.org***

## என் சமூக மருந்தகம்

மருந்துகள், மூலிகைகள் மற்றும் குறைநிறைவுக்கூறுகள் பற்றி நம்பகமான ஆதாரங்கள் மற்றும் வழிகாட்டுதலை குழு மருந்தாளர்களால் வழங்க முடியும்.

கடை பெயர் ______

முகவரி ______

______

தொலைபேசி ______ தொலைநகல் ______